**செ.வெ. எண்: 396** **நாள்: 30.06.2011**

சென்னை வில்லிவாக்கத்திலுள்ள ஆதி திராவிடர் நலக் கல்லூரி விடுதிகளை மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் ந. சுப்ரமணியன் அவர்கள் 29.06.2011 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார். அமைச்சருடன் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் திரு ஜே.சி.டி. பிரபாகர், அரசு செயலர் திரு ஆ.சு. ஜீவரத்தினம் இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நல ஆணையர் திரு பொ. சிவசங்கரன் இ.ஆ.ப., தாட்கோ மேலாண்மை இயக்குநர் திரு கி. விஜயராஜ்குமார் இ.ஆ.ப., மற்றும் சென்னை ஆதி திராவிடர் நல அலுவலர் திரு ஜி. தாமோதரன் ஆகியோரும் உடன் இருந்தனர்.

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள், விடுதியில் தங்கியுள்ள மாணவர்களிடம் தங்களது குறைகளை கேட்டறிந்தார். மாணவர்கள் தெரிவித்த குறைகளை உடனடியாக களைய உரிய அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார். விடுதியில் அனுமதி பெறாமல் தங்கியிருந்த வெளியாட்கள் உடனடியாக வெளியேற்றப்பட்டனர். மீண்டும் இவர்கள் இங்கு அனுமதி பெறாமல் தங்கியிருந்தால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்தார். இது போன்ற நடைமுறைகள் நடைபெறாமல் கண்காணிக்கவும், விடுதியில் அடிப்படை வசதிகள் குறிப்பாக கழிப்பிட வசதி சரிவர பராமரிக்கப்படவும் விடுதி காப்பாளருக்கு அறிவுரை வழங்கினார்.

வில்லிவாக்கம் ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியினை ஆய்வு செய்த அமைச்சர், பள்ளியின் மேற்கூரை சிதலமடைந்திருந்ததை பார்வையிட்டு, உடனடியாக புதுப்பிக்க அறிவுறுத்தினார். மேலும் மாணவர்களின் நலன் கருதி பள்ளி தலைமை ஆசிரியர் அவர்களின் அறையில் வகுப்புகள் நடத்தவும் தலைமை ஆசிரியருக்கு அறிவுறுத்தினார்.

**வெளியீடு: –**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**